புரளாது சிறுகாற்றசைக்கு மிருதழை செவிச்
　　புகர்முகக் களிறுகாக்க
கோமேவு மசுபதியை முதலானவுடுபதி
　　குலாதிபதி தனபதி பொருங்
குறுகலார் பதிநெளிய முருகிமேல் வரும்வலிய
　　கும்பகேசபதி மனுபதி
காமேவு மகபதி கிரீடபதி ரத்தினசிங்
　　காசனதிபதி பெரிய
கங்கைசூழ் புவிகட்டும் வேங்கடேசுவரட்ட
　　கனசமுகபதி தழைகவே. (க)

* * * *

(செங்கீரை)

தண்ணமுத மஞ்சனங் குளிரவைத்தாட்டித்
　　தழீஇயுமீரம் புலர்த்தித்
தகுநுதலிடைப் பூதியிட்டுமேற் காணவொரு
　　தனிதிலக் காப்புமிட்டு(க்)
கண்ணிலெப் பொருள்களுந் தெரியநிறையஞ்சனங்
　　கலவித்து மடியில்வைத்துக்
கனிவாயினமுதம் புகட்டிநெய் பெய்தரு
　　கதிர்க்குஞ்சி யுச்சிமோந்து
பெண்ணணங்கினர்சூழ வைகுநின்றாயரிற்
　　பேராசைபெருக விண்ணில்
பெறுகுறிதெரிந்துபி னிலக்குறியின்மெல்லப்
　　பெயர்ந்துநெஞ்சாற் றவழ்ந்து
தெண்ணிலா மதிவதன மண்டலம சைத்தினிய
　　செங்கீரையாடி யருளே
செங்கண்மாலெனு(ம்) வெங்கடேசுவரெட்டேந்திர(சுய)
　　செங்கீரையாடி யருளே. (க)

End:

வள்ளற்குச்சரியாய் நிதிதரவரு வரதனைப்பெறு தியாகர்
வள்ளத்திற்றிரள்பா லனமுதலி வளர்த்திடு மனுகூலா
கள்ளப்பற்றலர் மார்பிடையுருவு களிப்புடை வடிவேலா
கல்விக்குப்பெரிதா யதனருமை கணித்தவி தரணிகா
விள்ளச்சொற்பிசகா நிசவசன வி[த](ச)க்ஷண சுகுணாளர்
வெல்வித்தைக் குலகோர்புகழ்பொதிகை யகஸ்திய நிகர்வோய் நீ
உள்ளத்திற் கனிவாய் வளர்திருப வுருட்டுக சிறுதேரை
யுற்பனமால் வேங்கடேச ரெட்டேந்திர வுருட்டுக சிறுதேரே.

Colophon:

சிறுதேர் முற்றும்.

(ரு-பு.)—

இது, எட்டையபுரத்து அரசராகிய வேங்கடேசுவர எட்டர்மீது இயற்றப் பட்ட பிள்ளைத்தமிழ். பத்துப்பருவங்கட்கும் ஐவைந்து பாடல்களாகப் பாடப்

பட்ட ஐம்பது பாடல்களையுடையது. இந்தப்பிரதியில் இடையிடையே சிற்சில பாடல்களில்லை. இயற்றியவர் தெய்வநாயகரென்னும் கவிஞரெனத் தெரிகின்றது.

(b) பூதரவிலாஸம்.

BŪDHARAVILĀSAM.

Foll. 10a—28a. Fol. 28b is left blank.

Similar to the above. The stanzas herein are erotic in character: by Deyvasvāmi.

Incomplete.

Beginning:

பூதரவிலாஸம்.

பொன்னங்கமல மகள்செனிக்கப்
புடவிபுரக்கு மகராசன்
பொழியும் புயல்போ விருதிியும்
புலவர்க்கருளுஞ் செயபோசன்
கன்னல்மொழியாள் சகதேவி
கருணைபெருகுஞ் சமுகேசன்
கதிக்கும்வைப்பு நதிமாலை
கருத்துள்வைக்கும் விசுவாஸன்
செந்நெல் விளையு மிளசைநகர்ச்
செங்கோல் செலுத்து மகுடேசன்
செழிக்குஞ் சந்திர குலத்தில்நல
சிலவார்குல வுத்தமநேசன்
வன்னமயில்வேல் கழுகுமலை
வரதர்கருணை வளர்த்தாலே
வாழ்வோன் வேங்கடேசுவரெட்ட
மகிபனவனி புரப்பவனே.

* * * *

தினமுமாலை யாதரித்தாய்
தினமுமாலை யாதரித்தேன்
சிறைப்புண்மலிவாய்ப் புலம்பலுற்றாய்
சிறைப்புண் மலிவாய்ப் புலம்பலுற்றேன்
இனமுமோதப் பயப்படுவாய்
இனமுமோதப் பயப்படுவேன்
இருந்தேகமுமேற் பசந்திருந்தாய்
இருந்தேகமுமேற் பசந்திருந்தேன்
கனமுமெலிவாய்க் காட்டுவைநீ
கனமுமெலிவாய்க் காட்டுவன்யான்
கலையுஞ்சரிவா யிருப்பாய் மே
கலையுஞ்சரிவா யிருப்பேன் யான்
தனவான் வேங்க டேசுவரெட்ட
சாமிமோகம் படைத்தவென்னை(ச்)
சரியாயிருந்தாய்[ப்] பூதரமே
சரியாவளையுந் தருவாயே.

End :

முந்தும்புணரி யெழுமலையே முரசாயதிர வருமலையே
    மூவிருமதவேள் தருமலையே மூடியேன்றமரே வருமலையே
பந்தஞ்சேய நீண்மலையே பயிலுங்குயிலுஞ் செய்மலையே
    பகர்ந்திடாதென் விம்மலையே பருவமடவார் பொதுமலையே
சந்தும்புகலார் கும்மலையே தருவரிதையோ ராமலையே. (கக)

பருதிமதியும்வாழி யெழு பருவமுகிலும்வாரி கடல்
    பணித்தபுவியும்வாழி சொந்தப் பந்துசனமும் வாழி நிதி
பெருகுமிளசைவாழி தங்கள் பெரியகுலமும்வாழி மகப்
    பேறுசனித்துவாழி யிந்தப் பிரபந்தமதுவும்வாழி மற்றும்
துரைகளெவரும்வாழி மிகுஞ் சயசெங்கோலும்வாழி வெற்றி
    தொடுத்தபுகழும்வாழி யெங்கோன் றுலங்குகுடையும் வாழியிணர்
விரியுமணப்பூந் தளவணியும் விவேகத்துரையா யரசுசெயும்
    வேங்கடேசுவரெட்ட மனுவேந்தர் வேந்தன் வாழியவே. (ரா)

Colophon :

நளஞூ தைமீ 9உ முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூலும் எட்டயபுரம் அரசராகிய வேங்கடேசுவரெட்டர்மீது இயற்றப் பட்டுள்ளதே. பெரும்பாலும் இன்பச்சுவையே மிகுத்துக் கூறுவது. நூறு பாடல்களாலாகியது. இதில் 16, 17, 20, 2!, 24, 25, 30, 31, 42, 43, 52, 53, 76, 77, 84, 85, 90, 91 என்னுமெண்களமைந்த பாடல்களில்லை. இந்நூலாசிரியர் தெய்வசுவாமியென்னுங் கவிஞர்.

(c) வேங்கடேசுவரெட்டன் சோபனம்.

VĒṄKAṬĒSUVAREṬṬAN ŚŌBHANAM.

Foll. 28a—36b.

Kummi songs in praise of and wishing long life and benedictions to the Raja of Eḷasainahar of Eṭṭayāpuram. The author seems to be Deyvasvāmi.

Complete.

Beginning :

சோபனம்.

மாமேவுநாளும் வளரி(ள)சைப் பதிமன்னன்
    வேங்கடேசுவ ரெட்டமன்மேல்
பாமேவு செந்தமிழ்ச் சோபனம் பாடப்
    பரமகுருபதங் காப்பாமே. (க)

இங்களணியுங் கடவுள ரீன்றருள்
    செல்வவிநாயகனைத்தொழுது,
மங்களமாயிந்தச் சோபனம்பாடவே
    வாலசரசுவதி காப்பாமே. (உ)

* * * *

ஈசனருள் பெற்றிடும் வேங்கடேசுவ ரெட்ட
நரேந்திர பூபதிமேல்
காசினியெங்கும் புகழ்ந்திடச் சோபனக்
காவியம்பாடித் துதித்திடவே. (௬)

*　　*　　*　　*

கோடானுகோடி மனுக்களெல்லாங் கூடிக்
கும்பிட்டுக் கைகட்டி வாய்பொத்தவே
நாடாளும் மால்வேங்கடேசுவரெட் டேந்திரனை.
நாடிச் சோபனம் பாடுங்கோடி. (௧௨)

*　　*　　*　　*

நன்னயஞ் சேர்மது ராபுரிபோலிந்த
நாட்டிற் பெருஞ்செல்வங் காட்டியுயர்
தென்னிளசைச் சமஸ்தானமும் வாழ்கவே
செம்மையாய்ச் சோபனம் பாடுங்கோடி.

End :

வேதாகமங்கட்கும் புராணங்கட்கும் மறை
வித்தகர் யாவர்க்குஞ் சோபனமே
சீதாசமேதர்க்கும் வாணிமணாளர்க்குந்
தென்கயிலாயர்க்கும் சோபனமே. (௧௪)

கங்கைக்கிரீசர்க்குஞ் சோபனமே யிந்தக்
காசினியேழுக்குஞ் சோபனமே,

மங்களஞ் சேரெங்கள் கம்பளவங்கிஷமும்
வாழியல் லூழியுஞ் சோபனமே. (௧௫)

முற்றும்.

(கு-பு.)—

இதுவும் இளசை நகரென்னும் எட்டயபுரத்தரசர் விஷயமானதே. இயற்றியவர் தெய்வசுவாமி கவிஞரெனத் தோற்றுகிறது. இதில், அவ்வரசர்க்குப் பல சுபங்கள் உண்டாகவேண்டுமென்றும், அவர் நீடூழி வாழவேண்டும் என்றும் வேண்டப்பட்டுள்ளது. ஒருவகைக் கும்மிப் பாடலாலாயது. இதன் பின்னர் 4 பக்கங்களில், தெய்வசுவாமி கவிஞர் பூதரவிலாசமியற்றி யரங்கேற்ற, அதற்கு அரசர் மிகவுவந்து விசேடமாகப் பரிசு அளித்தவிஷயமாகக் காளையையென்பவரியற்றிய 3 பாடல்களும், சிவசாமி பிள்ளை யென்பவர் பாடியபாடல் மூன்றும் எழுதப்பட்டுள்ளன.

R. No. 584.

Paper. $10\frac{1}{4} \times 9\frac{1}{4}$ inches. Foll. 82. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. Appuvayyangar Arvagal, Tamil Pandit, Srivilliputtur.

திருவாரூர்க்கோவை.
TIRUVĀRŪRKKŌVAI.

Same work as that described under R. No. 317 ante, but with variations in readings in each stanza and with notes showing also how the stanzas are illustrations of the Ahapporuḷ of the Tamil grammar.

Contains 1 to 385 stanzas.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக் காட்லாக் 317-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே; ஆயினும் இதில் பெரும்பாலும் அடிதொறும் பாட பேதங்களும், அகப்பொருட்டுறை (இலக்கண விளக்க)ச் சூத்திரங்களும், அவற்றின பொழிப்புரை கருத்துரைகளும் உள்ளன. இதில் ஒன்று முதல் முந்நூற்றெண்பத்தைந்து பாடல்களேயுள்ளன.

R. No. 585.

Paper. 10¼ × 9¼ inches. Foll. 44. Lines, 20 in a page. Tamil and Grantha. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. Appuvayyaṅgār Avargaḷ, Tamil Pandit, Srivilliputtur.

வஸ்துநிர்ணயம்.
VASTUNIRṆAYAM.

A prose work describing in detail that Bhaṭṭarpirān or Periyaāḷvār established before a Parliament of religions convened in the court of the Pāṇḍya King Vallabhadēva, that Viṣṇu is the Supreme Brahman and obtained the treasure intended for the successful controversialist.

Complete.

Beginning:

பெரியாழ்வார் வஸ்துநிர்ணயம்.

ஸ்ரீயஜ்ஞிநஃ வஃரொஸாய வடு யாஜெஞ நஜோ நஃஃ |
ஸ்ரீவிஷ்ணு விசுவிசூராஜவாஸிநெ ஜொகவாஸிநெ ||

என்று இப்படிப்பட்ட ஹசூ (. . . . . . .) ஸேவ்யமானராய் . . . . . நாமத்தையுடையவராய், ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பெருமாளுடைய பூர்ண கிருபையினுலே (?) பாத்ரனுய் ஸ்ரீவிஷ்ணு சித்தனென்னப்பட்ட . . . . மத்தை யுடைத்தா . . . .

மதுரையை யாளுகிற ஸ்ரீவல்லப தேவனென்கிற பாண்டிய மண்டலே[ச்]சுவரன் ஒரு நாள் * * * இராத்திரியில் அடைப்பக்காரனுந் தானும் கொங்கணி போட்டுக்கொண்டு * * * * ஒரு பிராமணனுடைய வாசற்றிண்ணைமேலே ஒதுங்கியிருந்தான் * * * * பின்பு தன்னரண்மனையில் பிரவேசித்து * * * விவேக ஸம்பந்நனென்கிற பிரதானி முகத்தைப் பார்த்து ராஜா * * * சொல்லுகிறுன். * * * ஸகல மதத்தாரும் தங்கள் தங்களிஷ்ட தேவதைகளையே பரப்ரம்மமென்று ப்ரமாணம்

முதலான லக்ஷணங்களை ஒதிச் சொல்லும்போது கேட்டுக்கொண்டிருக்கிறோமே; விசாரிக்குமிடத்தில் பரதத்வம் ஒன்றேயொழிய ஸஹஸ்ரவ்யாஸ்ரங்கள் இல்லையே * * * என்று புத்தியைக் கேட்கிற ராஜாவோடே மந்திரி சொன்ன வார்த்தை :—இதற்கு நாம் * * * பரதத்வ சுல்கமாய் நம்முடைய பொக்கிஷத்திலுள்ள ஒசத்தியாகவிருக்கிற * * * * ரத்நத்தை யெடுத்து . . . தோரண ஸ்தம்பங்கள் நடுவிலே கட்டித் தூக்கி, இந்த வயனம் ஜகத்தெல்லாமறியப்பண்ணினால் நாநா தேசத்திலேயுள்ள ஸகல மதஸ்தர்களும் தன்னாலே வந்து பிரஸங்கம் டண்ணுவர். அப்போது பரதத்வமான தெய்வமும் தன்னாலே வெளியாம் என்று சொன்ன மந்திரி வார்த்தைக்குச் சந்தோஷப்பட்டு இது காரியந்தானென்று அப்படியே விசேஷ ரத்நங்களை வரவழைத்துக் கிழிகட்டித தொங்கவிடச்சொல்லி அந்தச் செய்தியை நாநா தேசங்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

* * * *

ஒரு சமயத்தா[னு](ரு)ம் தம்முடைய தெய்வமே பரதத்வமென்று வாதித்து ஜயம்பண்ணி(ச்) சுல்க மறுந்து விழும்படி சத்தியமாய்ச் சொல்லி ரத்நத்தைக் கொண்டுபோக மாட்டாமற் போனார்கள்.

அது கண்டு ஜிஜ்ஞாஸுவாய் முமுக்ஷுவான ராஜா சிந்தாக்ராந்தனாய்(ப்) பரிதபித்துக்கொண்டிருக்கும்போது (க்ஷிப்ரவஸரெ) அவருடைய பாக்கிய விசேஷத்தாலே ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையான் தமக்கு நித்தியமாய்(த்) திருமாலை கட்டிச் சமர்ப்பிக்கிற விஷ்ணு சித்தருக்கு ஸ்வப்னத்திலே தெரியப்பண்ணி * * * * அப்போது விஷ்ணு சித்தர் * * * அருளிச் செய்கிறார். வாருங்கோள் சமயத்தார்களே! ஒ(வ்வொ)ரு சமயத்தாராய் வந்து உங்களுங்கள் மதப்ரமாணங்களை நிர்வஹித்து அதுவே சத்தியமென்று சத்தியம்பண்ணி ரத்ந மூட்டையைக்கொண்டு போங்கோ(ள்). இல்லையா(கில்) எங்கள் வேதேஷ ப்ரமாணத்தாலே ராஜஸதாமஸத்தாரை ஜயித்து ஸத்யத்தைச் சொல்லிச் சுல்கக்ரயத்தைப்பண்ணி ஜயிக்கிறோமென்றார். அப்போது ஸௌகதாந்திகவைஹாஷிக ஶைவாத்திக யொகாசாரரென்கிற நாலு விதமான ஸௌகதர் வந்து எதிரே நின்றார்கள். . . . . எங்களுக்கு, புத்தனே குரு. க்ஷமிம்ஸா உபோஷகாராதி தர்மங்களே மோக்ஷஸாதனங்கள்.

End:

அதற்குப் பின்பு பெரியாழ்வாரென்கிற திருநாமத்திற்கு யோக்யரான ஆழ்வாரை ஸ்ரீவல்லபன் ஸூரிய ஸோமவீதியில் எழுந்தருளப்பண்ணி * * * * * * * ஸ்வர்ண வஸ்திர பூஷணங்களையும் சுல்க ரத்ந ப்ரமுகங்களையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து அதில், சில விசேஷ ஸமாராதன திருப்பணிகள் நடக்கி(ன்)ற[ப்](ற்) போலே நியமித்து * * * ராஜாவே! உன்னுடைய பாக்கியம் என்னவென்று சொல்லலாமென்று கொண்டாடி, அவர்களைக் கடாக்ஷித்து ஸ்ரீ பகவத் பாகவத பரதந்த்ரனாய் தேவ ப்ராஹ்மண மான்யங்கள் முதலானவைகளை நன்றாக ராஜநீதி க்ரமத்தாலே பிரஜாபாலனத்தைப் பண்ணும்பிள்ளாயென்று நியமித்தருளினார்.

அந்தப்படி ராஜாவும் மகாப்ரஸாதமென்று கிருதார்த்தனானேனென்று ஸபரிவாரனாய்ப் பெரியாழ்வாருக்கு ஸாஷ்டாங்கமாகத் தண்டம் ஸமர்ப்பித்து, அவருடைய கிருபா பாத்ரனாய்த் திரும்பி மதுரைக்குவந்து [ராஜா] சுகமாகவிருந்தான்.

அதற்குப் பின்பு பெரியாழ்வாரும் பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய திரதராய்(ப்) பகவந் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு, எப்போதும் போலே திருநந்தவனத் திருமாலை கந்தபுஷ்பாதிகள் ஸமர்ப்பித்துக்கொண்டு நித்ய க்ருத்யகைங்கர்ய பரராய்ச் சுகமாக எழுந்தருளியிருந்தார்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

Colophon:

௧௨௭௰௫ விரோதிகிருத் வருஷம் தைமீ ௰௪௨ திங்கட்கிழமை கூடின சுடதினத்தில் பெரியாழ்வார் வஸ்து நிர்ணயம்.

அந்த சுந்தரர் திருமலை மதுரகவி தாஸன் அப்பு எழுதியருளப் பண்ணினது.

இந்த ஸ்ரீ கோசம் ௯௫ இருபத்தைஞ்சில் முகிந[்து](ந்)து.

அண்ணன் திருவடிசளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல், வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பெரியாழ்வாரென்று பிரஸித்தி பெற்றுள்ள ஸ்ரீவிஷ்ணுசித்தர், பாண்டியன்-வல்லபதேவனது சபையில் பரதத்வ நிர்ணயஞ் செய்து கிழியறுத்து அரசனுக்கு அநுக்கிரகஞ் செய்த செய்தியைப் பரக்கக்கூறுவது.

பௌத்தம், ஜைனம், சார்வாகம், காபாலிகம், வீரசைவம், பாசுபதம், பாதஞ்ஜலம், கபிலம், பாஸ்கரம், ப்ராபாகரம் முதலிய மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதங்கள் சிறந்தனவென வெடுத்துக்கூற, ஆழ்வார் அவற்றை யெல்லாம் யுக்தியினாலும் வேதசாஸ்திரங்களாலும் கண்டித்து நாராயணனே பரதத்வமென்று ஸ்தாபித்த விஷயம் இதில் நன்கு கூறப்பட்டுள்ளது.

இந்தப்பிரதியில் இது முற்றுமுள்ளது.

R. No. 586.

Paper. 10¼ × 9¼ inches. Foll. 188. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M.R.Ry. Rāmakṛṣṇa Ayyar Avargaḷ, Board School teacher, Tirupparankunram, Madura district.

ஜயங்கொண்டார் வழக்கம், உரையுடன்.

JAYAṄKOṆḌĀR VAḺAKKAM WITH COMMENTARY.

A centum of stanzas addressed to Jayaṅkoṇḍār, a form of Śiva, worshipped in Niyamanagar. Each stanza embodies a proverb with an appropriate story in illustration of that proverb : by Muttayyar.

Complete.

Beginning :

<u>செயங்கொண்டார் வழக்கம்.</u>

சீர்பொருந்துந் தென்னியமைச் செயங்கொண்ட
சோளீசர் திருப்பேர் வாழ்த்தி(ப்)
பார்பொருந்துங் குருவிருத்த[ம்](ப்) பா[ர்]மாலை
தனிலுலகப் பழமைச் சொல்லை
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
புவியிலுள்ளோ ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
கணபதிதாள் காப்புத் தானே.

(என்றது)—

சீர்தானே பொருந்திய <u>நியமநகரில் செயங்கொண்ட சோளீசுவரர்</u> பெயரினாலே உலகவழக்கச் சொல்லுக்கு முற்காலத்துத் திருஷ்டாந்தத்தைக் கொடுத்து(க்) குருவிருத்தமாய்ப் பாடவேண்டியதற்குக் காருதவும்படி கொடுக்கப்பட்ட துதிக்கரத்தோடுங்கூடிய வெயிலுகந்த விநாயகன் பாதமே காப்பென்றவாறு.

* * * *

சிலைவேளை வென்றபிரான் தென்னியம
நகரில்வளர் செயங்கொண்டார் மேல்
உலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்ன
சொல்லைத் தமிழாலே யுரைப்பதற்கு(க்)
கலைவாணியாகியுல குள்ள மட்டும்
படிக்கவந்த கவிதா கன்னி
மலர்வேதன் மனைவியெந்தன் மனதிலிருந்
திவ்வுரையை வழுத்து வாளே.

* * *

பத்தர்கழுத் தினிற் சூரிதண்டலை யென்
றுமைக்குரைத்த பரமர் மீதில்
வித்தகர் மூன் றுலகவழக்கத்தை யெடுத்
தொருநூறு விருத்தஞ் சொன்னார்
அத்வைதநிகரெனச்செயங் கொண்டார் மீதில்
<u>மூத்தையன் சிற்றறிவி னாலே</u>
மத்தகெசந் தனகுமுன்பின சிற்றெறும்பு
நடந்ததெென வசனித் தேனே.

* * *

நல்வேடன் வான்மீகர் சத்தரிஷிகளைச்
சேர்ந்து ராம மந்திரம்
சொல்வழுவில்லான் தகர்த்த திறமையிற்பின்
வருங்கதை முன்சொன்னா ரன்றோ
வில்விசயன் தேர்வெல்லக் கணைதொடுத்த
செயங்கொண்டார் விளங்கு நாட்டில்
கல்விதனககழகு கசடற மொழிதலென
வன்றோ கருது வாரே.

(எ-து.)—

வால்மீகிரிஷி வேடனாக வனசஞ்சாரமாய்த் திரியும் நாளிலே சப்த ரிஷிகளைக் கண்டவுடனே நல்லறிவுதோன்றி வந்து எனக்குப் புத்தியென்னவென்று கேட்க, அவர்கள் ராமமந்திரங் கட்டளையிட, அது சொல்லத் தெரியாதென்ன, இந்த மரத்தின்பெய ரென்னவென்று ரிஷிகள் சொல்ல, அது மராமரம் என்றுசொல்ல, அந்த மரத்தின் பெயரைத்தானே சொல்லிக்கொண்டிருவென்று * * * பின்வருங்கதை சொல்லத்தொடங்கினார்.

ஆதலால் கல்விக்கழகு கசடறமொழிவதென்று உலகஞ் சொல்லுமென்றவாறு. (க)

End :

சிவயோகி வெகுளியினால் வரரிஷியு
மிடபமெனச் செனித்தான் பாரில்
பவமடியா ரகத்துமைலிங்கா புராணியை
வதைத்த பழியின் தோஷம்
நவதீர்த்த மாடியன்றோ தீர்ந்ததென்றார்
செயங்கொண்டார் நலஞ்சேர் நாட்டில்
தவமுடையோர் மனமுறியச் செய்தவர்க்குப்
படர் வினைதானென் னென்பாரே.

(எ-து.)—

பூலோகத்திலே வரரிஷியென்றொரு ரிஷி அதிசயமாகத் தபசு பண்ணிக்கொண்டிருந்தார். அவர் தவசு மகிமையை மற்ற ரிஷியெல்லாங் கேட்டிருந்து, அகஸ்தியரோடும் ஐம்பதுபேர் தபோதனர்கள் அவரைப் பார்க்கவேணுமென்று அந்த ரிஷியண்டைக்கு வந்தார்கள். வந்தவர்களை வரரிஷியானவர் அங்கீகாரம் பண்ணி வணங்காமல் தன்னுடைய தவசின் கர்வத்தினாலே அவமதிப்பாய்(ச்) சட்டைபண்ணாமலிருந்தார். அதுகண்டு தவத்தை ஆதரிக்குந் தபோதனர்களைம்பதுபேரும் வெகுண்டு கோபமாகி எங்களை யிகழ்ச்சியாய்(ச்) சட்டைபண்ணாமலிருந்த . ஆங்காரத்தினாலே எருமைக்[கி](க)டாவாய்ப் பிறக்கக் கடவதென்று சபித்தார்கள். அந்தச் சாபமொழி கேட்டவுடனே வரரிஷி பயந்து [ரொ](திர)ம்பவும் வணங்கினான். அடியேன் செய்தபிழை பொறுத்து ரக்ஷிக்க வேணுமென்றுசொல்ல அப்போது தபோதனர்களிரக்கமாகி வரரிஷியைப் பார்த்து, நீ அசுரர் பெருங் குலத்திலே மகிஷாசுரனென்று பிறந்திருந்து ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டிரு * * * பரமேசுவரி திருவண்ணாமலையிலே தவசு பண்ணவருவாள் - அப்போது உன்னுடைய சாபமும் [தீ](தா)பமுந் க்ஷணப்பொழுதிலே அவள் தீர்த்துவிடுவாள் என்றும், அப்பால் நீ நல்ல கதியடைவாய் என்றும் சொல்லிப்போனார்கள். * * * * * * * தபோதனர் கோபத்தினாலே ரிஷி மகிஷமானான். படிகலிங்கத்தைக் கழுத்தில்வைத்திருந்தவனை விதனப்படுத்தியதால் அந்த ஈசுவரிகையில் லிங்கம் ஒட்டிக்கொண்டது. ஆதலால் பரப்பிரமமாகிய ஐயங்கொண்டாருலகில் பெரியோர்களுள்ளம் பேதிக்கச் செயப்படாதென்று உலகவழக்கம் சொல்லும் என்றவாறு. (உ)

(கு-பு.)—

இந்நூல் தென்றியமநகரில் கோயில்கொண்டருளிய ஐயங்கொண்டாரென்னும் சிவபிரான்மீது பாடப்பட்ட நூறு பாடல்களையுடையது. இதன் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு உலக வழக்கச் சொல்லும் (பழமொழியும்) அதற்குரிய பழையகதையும் அமைந்துள்ளன. இயற்றியவர் முத்தையரென்பவர். நடை சாதாரணமானது. இந்தப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றுமிருக்கிறது.

R. No. 587.

Paper. 10¼ × 9½ inches. Foll. 8. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M.R.Ry. Malayayyāppiḷḷai Avargaḷ, Alwartirunagari, Tinnevelly district.

குடந்தையந்தாதி.

KUḌANDAIYANTĀDI.

A poem in praise of Āravamudan, a form of god Viṣṇu, worshipped in the sacred shrine in Tirukkuḍandai, i.e., Kumbakonam in the Tanjore district.

Contains 1 to 55 stanzas and breaks off in the 56th stanza.

Beginning:

குடந்தையந்தாதி.

ஆரா வமுதி னருட்குடந்தை யென்பார்க்குத்
தீரா வினையெல்லாம் தீர்க்குமே—பாரா[ழ](ஞ)
மாமகிழுந் தாள்வ . . . . ரும் வந்திறைஞ்ச(த்)
தாமரைச் செங் கண்வாழ்வோன் றான்.

* * * *

போதனு மானு மழுவுந்தரித்துப்புரிந்து நட
பாதனுமானு . . . வானும் பகைத்தவன் பாற்
றூதனு மானுமறவியும் போமென்ற சொற்பவள
மாதனுமானுங் குடந்தையின் கண்வாழருந்தவனே. (உ)

வளரிக்குநெல்லும் பசும் பூகமுந் தம்முண்மாறு கொண்டே
கிளரிக் குடந்தை . . . . . . னே கேசவவாவெனவே
முளரிக் குளக்கய முன்னுளழைக்க முன்வந்து நின்று
யுளரிக்கும் மைவர் குழற் . . . . ன்றெளிவதவே. (ஈ)

End:

பதந்தந்தவாவறுத் தென்னையு மாளுங் கொல்பாசடைக்கே
மிதந் தந்தவாரிதிக் கண்வளர்ந்தோன் விதியார் மறையின்
மதந்தந்தவாவிக்குரு கூரசமகிழ் குடந்தை
யிதந்தந்தவாரண முய்யவப்போ[ல](த)ஞ்ச லென்றவனே. (ருரு)

என்ற வரைப்புரம் போகாமுனங்குவிழைத் தெதிரா
நின்றவ . . . .

(கு-பு.)—

இது, திருக்குடந்தையென்னும் கும்பகோண க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டருளிய ஆராவமுதனென்னும் திருமாலின் தோத்திரம். அந்தாதித் தொடையாலாயது. இந்தப் பிரதியில் 1-55 பாடல்களும், 56-வது பாடலின் முதலடியுமே யுள்ளன. உள்ள பாடல்களிலும் இடையிடையே சிற்சில பதங்களும் தொடர்களும் விடப்பட்டுள்ளன இந் நூலாசிரியர் இன்னுரெனத் தெரியவில்லை

R. No. 588.

Paper. 10½ × 9½ inches. Foll. 42. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. of M.R.Ry. Tambu-Śaṭakōpa Ayyaṅgār Avargaḷ, Alwartirunagari, Tinnevelly district

திருவாய்மொழியருஞ்சொல்விளக்கம்.

TIRUVĀYMOḺIYARUÑCOLVIḶAKKAM.

A gloss on the difficult expressions found in the different commentaries written by Nambiḷḷai and others on the Tiruvāymoḻi.

The author of the gloss appears to be a disciple of Periyanambi.

Complete.

Beginning :

திருவாய் மொழியருஞ்சொல் விளக்கம்.

முதற்பத்து-உயர்வற, வீடுமின், பத்துடை.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸம்பந்நாய |
யதீந்த்ர ஸ்ரீ பாதாம்புஜ நிஷ்டாய நம: ||

ஸ்ரீ ஸேநாபதி ...

தரிசு—கடன், தண்ணீர்த்துரும்பால், (நீர் தொறும்பரந்) கெண்டிகளிலே தீர்த்தஞ்சாப்பிடுகிற பொழுது கெண்டி மூக்கைத் துரும்பு முதலான[து] (வை) அடைத்துக்கொண்டு சாப்பிடப் போகாமல் பந்திக்கும். இத்தால், பிரதிபந்தக மென்றபடி.

ஒடுங்கவவனித்யத்ர :—எம்பெருமானுர் ஸ்ரீபாதத்திலே புக என்றது, திருவடிகளிலே தண்டஞ் சமர்ப்பித்து நிற்கவென்றபடி. * * * கழுத்திலேயோலை கட்டித் தூதுபோகையாவது, அங்குப்போனால் சொல்லுகிற வார்த்தையை நெஞ்சிலே தரித்துக்கொண்டு போகிறதைப்பற்றிக் கழுத்திலே யோலைகட்டி யென்றது. இத்தால் அவனுடைய சௌலப்யாதிசயம்

End :

பேரேயுறைகின்றபிரான் :—ஞூழற்று என்கிற விடத்திலே முகரம் ஒற்றன்று. ஒரு அக்ஷரமாக வாசிப்பது. உடன் கிடந்தவனை மடிதடவினவனைப்போலே :—உடன் கிடந்தவன் மடியிலேயிருக்கிற த்ரவியத்தை வஞ்சித்து எடுத்துக்கொண்டு, பின்பு, நம்மை விச்வஸித்திருந்தவனை நாமிப்படி

வஞ்சித்தோமே யென்று அநுதபிக்கு மாபோலென்றபடி. * * *
* * * *

முனியே நான்முகன் ப்ரவேசே :—தலக்கற்று—லஜ்ஜையற்று, தலக்கு—லஜ்ஜை.

எனக்காராவமுதாய் : தவதவ நாறுகை—தபோகந்தியாயிருக்கை.

முதல் தனிவித்தேயோ :—இட்டளம்—நெருக்கம். நெருக்கமாளுல் பிரவாஹத்திலே மிகவுஞ் சுழிக்கும்.

ஹரி : ஓம்: சுபமஸ்து. அவிக்நமஸ்து. ஆழ்வார் திருவடிகளே சரணம்.

Colophon:

திருவாய் பொழியருஞ் சொல் விளக்கம் முற்றிற்று

(கு-பு.)—

இது, நம்மாழ்வாரருளிய திருவாய்மொழி யென்னும் பிரபந்தத்திற்கு நம்பிள்ளை முதலிய பெரியாரியற்றிய வியாக்யானங்களிலுள்ள அரியபதங்களின் பொருள்களை விளங்கத் தெரிவிப்பது. இவ்வுரையாசிரியர் பெரிய நம்பி யென்பவரது சிஷ்யர்களுள் ஒருவரெனத் தோற்றுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R No. 589.

Paper. 10½ × 9½ inches. Foll. 11. Lines, 20 in a page Tamil. Good.

Transcribed in 1924–25 from a MS. of M.R.Ry. L. A Veṅkusāmi Ayyar Avargaḷ, Pleader, Dindigul, Madura district.

பழநியந்தாதி.
PAḺANIYANTĀDI.

A poem in praise of Muruhakkaḍavuḷ or god Subrahmaṇya, worshipped in the sacred Śaiva shrine in Paḻani. From the concluding stanza of this work, it is made out that the author was Bālasuppiramaṇiyar.

Complete.

Beginning:

வாழ்த்து.

இதத்தாரைஞானச் சிறுவாசல் வீடுகண்டேறியநற்
பதத்தார்தொழுந்தென் பழநியந்தாதியைப்பாடுதற்குச்
சிதத்தானே யோரைங்கரத்தானே மேகத்திரள் பொழிமும்
மதத்தானே யானைமுகத்தானே நாளும் வணங்குவனே.

* * * *

ஹரிஃ ஓம்.

பழநியந்தாதி.

திருப்பணிமிக்க விடத்துறைகாரணன் சீரெழில்வாய்த்
திருப்பணியுற்ற பழனிப்பிரான் சிலைச்சேரன் தவத்
திருப்பணிசெய்க்குடிலார் குகன்மீது செழித்த செவ்வாய்த்
திருப்பணிசைக்கவவன் சரணாமென் சென்னியதே. (க)

சென்னிக் கருமை யம்மான்பிரம்ப(ா)லடி தீண்டிடநீர்
சென்னிக் கருமையம்மாலருளீசன் றிருப்புதல்வா
சென்னிக் கருமையம்மால் வடிவாயிசைத்தோவிளங்குஞ்
சென்னிக் கருமையம்மானே பழநிச் செகத்தரசே. (உ)

End:

கனகத்தி வலம்பெறுஞ்சூர் வென்றோன் மெய்க்கண்டீரவ வா
கனகத்தி வலப்பழநுபுரியன் கதிரவன் சூழ்
கனகத்திவலம் வருமுருகோனைக் கருதினரெங்
கனகத்திவலம் புரிகுவள் செங்கமலைத் திருவே. (௩)

சீர்வாழி தென்பழநு புரிவாழி செழித்தவை[ய]கா
லூர்வாழி யிந்தவுலகெங்கும் வாழியுயர் பணிசெய்
வார் வாழிநாளும் புகழ்வாலசுப்பிரமணியன் தமிழ்(ப்)
பேர்வாழி மேன்மை யந்தாதியும் வாழிபெருகியதே.

Colophon:

பழநியந் தாதியெழுதினது முற்றும்.

சரவணோற்பவ சண்(முக) முருகேசனே துணை.

முற்றும்.

(கு.பு.)—

இது, பழநியென்னும் மலையில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுள் மீது அந்தாதித் தொடையாலமைந்த துதி. காப்பு வாழ்த்துப்பாடல்களுடன் 103 கட்டளைக் கலித்துறைகளையுடையது. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது இந் நூலாசிரியர் வாலசுப்பிரமணியரென்னும் பெயரினரென்பது சீர் வாழியென்னும் இறுதிச் செய்யுளால் தெரிவதன்றி, அவரது வரலாறு முதலியவொன்றும் புலப்படவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

R. No. 590.

Paper. 10½ × 9½ inches. Foll. 114. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1924-25 from a MS. belonging to the Mahārāja of Ettayapuram, Tinnevelly district.

(*a*) உறையூர்க்காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்.

UṞAIYŪRKKĀNTIMATIYAMMAI PIḶḶAITTAMIḺ.

Foll. 1*a*—43*a*.

A kind of Prabandha known as Piḷḷaittamiḻ written in praise of goddess Pārvatī, worshipped under the name Kāntimatiyammai in Uṟaiyūr in the Trichinopoly district.

Complete in 112 stanzas.

Beginning:

உறையூர்க் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்.

காப்புப் பருவம். விநாயகர் துதி.

மாமேவு மேனியஞ் செக்கர்வான் கரக்கவுண்
　　மதக்கமஞ் சூழ் கொண்டலோர்
வண்கோட் டிளம்பிறை விளங்கு புகர்
　　மீன்செம்மை வாய்(த்)த நயனக்கதிரவன்
காமேவு குடிலத் தடித்தொளிர் தாச்சுரர்
　　கணம் புகழ்ந்தேத் தெடுப்பக்
களிமிக்கு மண்ணுலகம் விண்ணுலக மாகவமர்
　　கடவுளடி முடி சூடுவாம்
தேமேவு கொன்றையணி துன்றுசடை யெந்தையார்
　　சிந்தைத் தடத்துண் மலரும்
செங்குங்கு மத்தாது விழியணி மொழித்தேன்
　　றிகழ்ந்த முக வம்போருகப்
பூமேவு பொற் கொடியை மற்கெழுமு
　　மளவில்பல புவனப் பரப்பெலாமுன்
பொறையுயிர்த் தாளைநிறை யுறையூர்ப் பிராட்
　　டியைப் புகழ்தமிழ்க் கவிதழையவே. (க)

* * * *

செங்கீரைப் பருவம்.

பொன்செய்த செஞ்சடைப் பெருமான் றிருக்கையாற்
　　பொங்காழி யெழு செங்கதிர்ப்
புத்தேட னகையிழந் தாங்கக் கதிர்க்குரிய.
　　புண்டரிக மனை யாட்டியுங்
கொன்செய்த நகையிழந் தறுகணீர் சிந்தியுட்
　　கொள்ளும் பயத் தழுந்தக்
கோலம் பொலிந்தொளி கொள் செங்கையம்
　　பங்கயங் குப்புறநிமிர்த்து நிலமீ
மன்செய்த கொங்கையந் திருமகளை யவளுரிய
　　மருமகளை யருளு மென்றுண்
மரையொன் றெடுத்தொன்று கோட்டி யிருள்
　　வீட்டியொளிர் வள்ளைக்கு தம்பையாடத்
தென்செய்த தமிழ்மணக் கோழிநகர் வாழுமயில்
　　செங்கீரை யாடி யருளே
சிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தகுயில்
　　செங்கீரை யாடி யருளே. (க)

End:

தாவிலொளி யீனுமணி நூபுரம் விராவுபொற்
　　றாமரைத் தாளு மருணன்
றன்னிளங் கதிரொத்த செம்பட் டுடுத்தித்
　　தயங்குமே கலை நுண்ணிடை[யு]

மாவியென்றுந் தளிர் மருட்டி வரதாபயம்
    வழங்கு செங்கையு மெய்ஞ்ஞான
மடைதிறந் தொழுகுமிரு கொங்கையு மிலங்குதிரு
    மங்கலச் சங்க மிடறுங்
காவிதிகர் கருணைபொழி விழியு முத்தணிகவின்
    காட்டு நாசியும் வள்ளைநேர்
கதிர்மணித் தோடுடைக் காதுமிள மூரலுங்
    கமல முகமும் பொலிதரப்
பூவின்மடவார் பரவு காந்திமதி யம்மைநீ
    பொன்னூச லாடி யருளே
பூந்தட நிலவுபொழில் வாய்ந்த வுறையூரிறைவி
    பொன்னூச லாடி யருளே. (௰)

Colophon:

பொன்னூசற் பருவம் முற்றும்.

(கு-பு.)—

இது, உறையூர்த் தலத்திலமர்ந்துள்ள காந்திமதியம்மை யென்னும் பார்வதியின் விஷயமாக வியற்றப்பட்டுள்ள பிள்ளைக் கவி. இது காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் என்னும் பத்துப் பருவங்களும், முதலில் விநாயகர் துதி முதலாகப் பதினொரு பாடல்களும் ஆக 112 பாடல்களாலாகியது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

(*b*) பாகம்பிரியாவம்மை பிள்ளைத்தமிழ்.
BĀGAMPIRIYĀVAMMAI PIḶḶAITTAMIḺ.

Foll. 43*b*—81*b*.

Similar to the above; in praise of the goddess Bāgampiriyāvammai, worshipped in Tirumantiraṉagar, i.e., the modern Tuticorin.

Complete in 101 stanzas.

Beginning:

<u>பாகம்பிரியாவம்மை பிள்ளைத்தமிழ்.</u>

கார்கொண் டகன்று கன்னங் கறே
    ரென்னத் திரண்டு சுருண்டகுழற்
காடுந்திலக பங்கயமுங் கோம்புங் குழையுங்
    கழுநீரும்
பார்கொண் டலராக் குமிழ் தளவாம்
    பலும்பூத் துளம்பூத் தலர்ந்து பச்சைப்
பசே லென்றிருந்த கற்பகப் பூம்
    பாகம் பிரியாடனைக் காக்க
பேர் கொண்டிருந்த வகலிகை கல்
    லுருவாக் கு[ழை]பய தாமரையும்
பிரமன் செனித்த தாமரையும் பிள்ளைப்
    பிராட்டி தாமரையுஞ்

சீர் கொண்டிருந்த நய்ன மெனச்
செக்கச் சிவந்த தாமரையுஞ்
செங்கைப் பருவத் தாமரை யுஞ்
செழித்த சொரூபக் கரும்புயலே. (க)

பன்னிரு பாட்டியல் :—

திருமாலரனே திசைமுக[ன](ன் க)ரிமுகன்
பொருவேல் முருகன் பருதிவடுகன்
*   *   *   *
மருவிய காப்பினுள் வருங்கடவுளரே—எனவும்,

அவருள்,

காப்பின் முதலெடுக்குங் கடவுடானே
பூப்புனை துழாய்முடி புனைந்தோனுகும்—எனவும்
அவன்றான் காவற்கிழவனுகலானும்.
*   *   *   *
முன்னுற மொழிதற் குரியனென்ப.
*   *   *   *

Colophon :

காப்புப்பருவ முற்றும்.

கருமந்தியுங் கருங்கவியும் வெள்ளைப் பெருங்
கவியுங் கருங் கரடியுங்
கடல்கொண் டெனவகண்ட படைகொண்டு நடை
கொண்ட காகுத்த ராகுத்தனு
ரொருமந்திர மனுமன்றன் முனியம்ப மண்குயவ
ரொப்பமிடு மொலி யொடும்பச்
சோலையொலியுந் திரையின் வேலை யொலியும்
பெரிதொலிப்பவை மறைபப வதனுல்
வருமந்த முகில்செங்கை யஃமயென் றமைப்ப மண்
மனை யோசை பனையோசையு
மாறிட்ட வன்றைக்கு மின்றைக்கு மாருதியும்
வாரிதியும் வாய் புதைக்குந்
திருமந்திர நகர்வந்த வருமந்த செல்வியே
செங்கீரை யாடி யருளே
தேக நீணுக பூணுகனுர் பாகமே
செங்கீரை யாடி யருளே. (க)

End :

சரசுவதி வென்னுவினின் றுஃரசெய் பிள்ளைத்
தமிழ் தங்ழ்ய வழகிய திருச்
சந்திதானந் தழைய முன்னதாய் நின்றசிவ
சங்கரேசுரர் தழைய வெண்
டிரைசெயா தென்றும்வாய் பொத்திய மகோததி
தீர்த்தமுந் தழைய மகுடச
சிந்துரச் சுந்தரப் பாண்டியக் களிறொடு
செந்திலானுந் தழைய விண்

டுரைசெயா வேதமுந்தழையச் சிவக்யான
வுற்பத்தியுந் தழையவே
[வு](யு)லகமுந்தழைய மும்மாரியுந் தழைய
வெவ்வுயிர்களுந் தழையமதிதோய்,
புரிசைதிகழ் மந்திரநிகர் வரிசையொடுதழையநீ
பொன்னூச லாடியருளே
புனலாடி விளையாடி வருகோலபாகமே
பொன்னூச லாடியருளே. (௰)

Colophon :

திருமந்திர நகரமாகிய தூத்துக்குடியி லெழுந்தருளியிரா நின்ற பாகம்பிரியாவம்மை பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

(கு-பு.)—

இது, தூத்துக்குடி யென்னும் திருமந்திர நகரத்தில் அமர்ந்துள்ள பாகம் பிரியாவம்மை யென்னும் பார்வதி விஷயமான பிள்ளைக்கவி. காப்புப் பருவம் பதினொரு செய்யுளும், மற்றை யொன்பது பருவங்கள் பப்பத்துச் செய்யுளுமாக 101 பாடல்களை யுடையது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

(c) சுப்பிரமணியசுவாமிபேரிலிருபுராண விருத்தம்.
SUPPIRAMAṆIYASVĀMIPĒRILIRUPURĀṈA VIRUTTAM.

Foll. 82*a*—107*b*.

A eulogy in 65 stanzas on Murukakkaḍavuḷ or Subrahmaṇya, worshipped in Tiruccendūr.

Complete.

Beginning :

சுப்பிரமணிய சுவாமிபேரிலிரு புராண விருத்தம்.

பூமருவு தில்லையின் முதற்குலத்துற்றுயர்
விபூதியணி யஞ்செழுத்தும்
பொருளென்று தினமுமுக் கனல்வளர்த்
தறுதொழில் புரிந்துமறை யாதியோதி,
யாமருவு பயன்விரவு ம[ண்ண](ன்ன)மிட் டன்பின்
மூவாயிரவர் செய்தபணியி
லனுவளவு மடிமையாற் செய்யுநெறி
காண்கிலே னுட்கொள்வ தெந்தவிதமோ,
காமருவு கற்பகநிழற்பொலி புரந்தரன்
கார்நிற விருத்திரனைமுன்
கருதிவதை செய்தபழி தீர்த்தமதுரைக்கடவுள்
கண்ணில்வந் தெண்ணில் பொருளாய்,

மாமருவு ஞானமுற் றுருகுமடியார்கண்மன
மலரில்விளையாடும் வாழ்வே
வளைசிந்து தரளங்க ளுயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவேலனே. (க)

End:

ஆரூரர் சொன்ன தொண்ட(ர்)த்தொகையு முன்னம்பி
யாண்டார்சொல் லந்தாதியு
மாதியாய்ச் சொன்னபடி பத்தர்கள் விலாசமென்
றாக்கிய சொற்களரும் வா[ளி](ழி)
பாரூரர் புகழ்கின்ற விறைவர்திரு விளையாடல்
பார்த்துவட நூல்பயின்ற
படிபைந் தமிழ்த்தொடை விருத்தமுண்டாக்கிய
பரஞ்சோதியாரும் வாழி
ஏரூர்வனப் பரிவர்சொன்ன நூ[லா](லிர)ண்டையு
மிச்செகமெலாம் விளங்க
வியல்செந்தில் வடிவேலவன் றுதியெனத்துதித்
தேழையான் குளறிவைத்த
சீரூருமிரு புராணம் விருத்தமாலையாய்ச்
சேர்த்தேட்டி லெழுதினவரும்
செப்பினவருஞ் செவிமடுத்தவரும் நீடூழி
சென்மகதி வாழி தானே. (கூ)

Colophon:

இருபுராண முற்றும்.

(கு-பு.)—

இது, திருச்செந்தூர் முருகக்கடவுள் விஷயமான தோத்திரம். அறுபத்தைந்து பாடல்களாலாயது. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை. இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது.

(d) தனிப்பாடல்.
TANIPPĀḌAL.

Foll. 108a—109b.

Stray unconnected stanzas in praise of Murukakkaḍavuḷ. These stanzas which are 8 in number are said to have been composed on different occasions by Śaṅkaramūrttippulavar.

Beginning:

நன்றாக.

சங்கரமூர்த்திப் புலவரவர்கள் சிற்சிலசமயங்களிற்செய்த

நேரிசை வெண்பா.

சுப்பிர மணிய சுவாமி துணையென்றே
செப்பரிய வெத்தூரஞ் சென்றாலு—மெப்பொழுதும்

கூடிவரு மென்மேலுங் கூப்பிட்டாலேனே னென்
ரேடிவரும் வேலுமயி லும். (௧)

* * * *

கையெடுத்த தெய்வமுனைக் காட்டிக் கொடுக்குமோ
செய்யெடுத்த செந்தூரான் சீரே—ஐயையோ
என்னுணை நெஞ்சே யிரங்காதே யோடிவரு
முன்னுணை வேலுமயி லும். (௫)

End :

தென்னமரத்தில் தேங்காய்நெற்று அறுந்துவிழச்சொல்லியது.
ஆசிரிய விருத்தம்.

ஆங்காரத்தாற் சூரர்குலமடங்கப் பொருததிறத்தாலே
யாங்காண்பதுவும் வடிவேலே யான்பாடுவதும் வடிவேலே
மாங்காய்தந்தா யிலைதந்தாய் வாழைப்பழஞ் சர்க்கரைதந்தாய்
தேங்காய்நெற்றுந் தரவேண்டுஞ் செந்திற்குமரப் பெருமாளே. (அ)

(கு-பு.) —

இதில் முருகக்கடவுள் தோத்திரரூபமான நேரிசைவெண்பாக்கள் ஐந்தும், கட்டளைக்கலித்துறை யொன்றும் நேரிசைவெண்பா வொன்றும் ஆசிரிய விருத்த மொன்றுமாக எட்டுப்பாடல்களுள்ளன. இவை சங்கரமூர்த்திப்புலவரென்பவர் சிற்சில சமயங்களிலியற்றியனவென்று தெரிகின்றன.

R. No. 591.

Paper. 10½ × 9½ inches. Foll. 246. Lines, 20 in a page. Tamil and Grantha. Good.

Transcribed in 1924-25 from a MS. of. M.R.Ry. Appuvayyangār Avargal, Tamil Pandit, Srivilliputtur.

ஸ்ரீராமாயணஸாரம்.
ŚRĪRĀMĀYAṆASĀRAM.

A commentary in Maṇipravāḷa style of composition on select stanzas in each of the Kāṇḍas of Vālmīki's Rāmāyaṇa and purporting to bring out the main purport and essence thereof: by Śrīnivāsācārya of Ātrēya-gōtra.

Contains the commentary on the Bālakāṇḍa and the Ayōdhyākāṇḍa.

Beginning :

𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑌤𑌂 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌵𑌰𑌮𑍍 |
𑌨𑌾𑌰𑌦𑌂𑌪𑌰𑌿𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌮𑍍 ||
𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑍇𑌣𑌚𑌕𑍋𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁𑌕𑍋𑌹𑌿𑌤𑌃 |
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌃𑌕𑌸𑍍𑌸𑌮𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌕𑌶𑍍𑌚𑍈𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ||
𑌬𑌹𑌵𑍋𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑍇𑌤𑍍𑌵𑌯𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌗𑍁𑌣𑌾𑌃 |
𑌮𑍁𑌨𑍇𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌤𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂𑌨𑌰𑌃 ||

இந்த ஶ்லோகங்கள் மூன்றும் அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்தருளின பெரு . . . . . . மொழிவ்யாக்யாநத்தில் ஸத்யம் ஜ்ஞாநம் ஜிஜ்ஞாஸ்யாம: என்கிற ஶ்லோகவ்யாக்யாநாவஸரத்திலே வ்யாக்யாதங்கள். அதை இங்கே எழுதுகிறோம். அதெங்[க](ங)னேயென்[றி](னி)ல் :—

*

நாரதோ ஹி தேவர்ஷி (ஸ்த)ஸ்ய ஸந்தக்ஷ ஹாஸாக: |
ப்ரஹ்மவாஹஸ்த்வம் ஸ்வஸ்ததம் வித ||

தும்புருநாரதர் புகுந்தனரென்கிறபடியே ஸமஸ்தாஸ்த ஸம்ஸார ப்ரவாண . . . . ஸத்ய ரூபமான தபஸ்ஸிலும் ஸமஸ்த கீத்நாநு ப்ரஸம்ஸாவ நிஷ்ணாத வாச ஸ்வாத்ய ஸ்வாத்யாய ஸ்வாத்யாயத்திலும் நிரதனுயுள்ளவனே . . . ஸம்ஸாரமாக ஸ்வாப்ரமேயத்துக்கு ஹேதுவாக வித்தை, மூந்[திர](தற) முன்னஞ் சொன்னபடி. தஸ்ய - ஸர்வ ப்ரமாணமதி ப்ரதிபாதகமான ஸ்ரீராமாயணத்தை நிர்மிக்கும்படி ஸந்நிஹிதமொனிஷ் ரென்[ன](ற)படி. தஸ்யாஸ்த்ரஸாஸ்ரேஷாம் தபஸாஸந்நிஹிதோஹம் என்கிற ப்ரமதி, வாஸ்ஷ்ராம்வர: வாக்கென்று ஸ்வராப்ரஷ்யமான வாக்கைச் சொல்லுகிறது. வேதார்த்தத்தை அறிந்தவர்களுக்கு ஶ்ரேஷ்டன் என்றபடி. வேதோபப்ரம் மணமாய் இதிஹாஸ ஶ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணக்யானத்தைச் சொன்னவன் வேதார்த்த வித்துக்களில் ஶ்ரேஷ்டன் என்னத் தட்டில்லையிறே. ப்ரோஞ்ச ராமாயணம் நர: என்றானிறே.

End:

அதைக்கேட்டுப் பிராட்டியினுடைய திருமுகமண்டலமும் ப்ரீதி விசேஷத்தாலே விகஸிதமாய்ப் புன்சிரிப்போடே கூடினபடியைக்கண்டு ஸ்ப்ரஸ்திதம் என்கிறான்.

ப்ரீதயுத்தஸ்ய ஸ்ரீதாதி—||அந்த ப்ரீதி தானத்தை-அத்தாலவனுக்கு ஸ்யம்வர வ்ருத்தாந்தத்தைச் சொன்னபடியையும், அதைக்கேட்டு உச்சிமுகந்து தன்னை அணைத்துக்கொண்டபடியையும், இவ்வலங்காரத்தோடே பெருமாளருகேபோய்ப் பெருமாளை யலங்கரிக்கக் கடவையென்று அவள் சொன்னதையும், இப்படி நடந்த இவைகளெல்லா[த்தை](வற்றை)யும் பெருமாளுக்குப் பிராட்டியருளிச் செய்தாளென்கிறான்.

—தஸ்மிந்ந்ராஸாக்ஷாக . . . . . . க்ஷிக்கு கிஞ்சித்கரித்த தபஸ் ஸமம் பெற்றவளிறே. ப்ரஹ்ருஷ்டா[ஸ்](த்)ஸ்வஹஸ்தாதி—|| மனுஷ்யரிடங்களிலே போய், போகாத பிராட்டியினுடைய ஸத்க்ருதவிஶேஷத்தைக்கண்டு பெருமாளுகந்தருள . . . . . க்கண்டு இளையபெருமாளுகந்தபடி. தாவென்று ப்ரஹர்ஷப்ரகர்ஷத்தைச் சொல்லுகிறது.

* * * *

அத்தாலே மூவர்க்கும் அழகுமெழிலும் அபிவ்ருத்தமானபடியைச் சொல்லுகிறது.

ஸஹாய: ஸமக்ஷணாராம: என்று ஸௌமித்ரிம் லக்ஷணம் ராம ராயாஹ்வம் ப்ரஸ்தானம்—|| என்கிறானிறே . . . . வநத்தைப்ரவேசிக்கு மோபாதி அரண்யத்தைப் பிரவேசித்து சுக்ஷ ஸஜ்ஜமா யிருந்தபடி. ||

Colophon :

ஆத்ரேய ஸ்ரீநிவாஸதாஸ ஸூரிணா க்ருதே ஸ்ரீராமாயணஸாரே அயோத்யாகாண்ட ஸார: ஸமாப்த:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

வாதூலவீரராகவார்ய பாதபங்கஜஷட்பத: |
தாஸோ விலிகவாநு ராமாயணஸாரம் ப்ரியாயதத் ||

ஸ்ரீராமசந்த்ராய நம:.

(கு-பு.)—

இது, வடமொழி வான்மீகி ராமாயணத்தின் சில ச்லோகங்களுக்கு ஸாரமான பொருள் இன்னவென விளக்குவது. மணிப்ரவாளநடையி லமைந்தது. இயற்றியவர் ஆத்திரேய கோத்திரத்தவரான ஸ்ரீநிவாஸாசாரியரென்பவர். இந்தப்பிரதியில் பாலகாண்டத்துக்கும் அயோத்தியாகாண்டத்துக்குமே உள்ளது. இடையிடையே சிற்சிலபதங்களும் எழுத்துக்களும் இல்லை.

R. No. 592.

Palm-leaf. 6¾ × 1½ inches. Foll. 131. Lines, 10 in a page. Tamil. Slightly injured.

Purchased in 1924–25 from M.R.Ry. R. Śrīnivāsa Ayyaṅgār Avargaḷ, Sentamiḻccelvan. Egmore.

(a) ஆத்மப்ரகாசவசனம்.
ĀTMAPRAKĀŚAVACANAM.

Foll. 1a—129b.

A treatise on Vēdānta in prose in the form of questions and answers. From the concluding passage it is made out that the author is Rāmanātha Piḷḷai.

Wants the first leaf.

Beginning :

காரணவிருத்தி யொன்றே பலவன்று ; அங்ஙனமாயினும் அதிற் பிரதிபிம்பித்த சைதன்ய சொரூபமான கடஜ்ஞானமும் அதில் அவ்வளவு காலமொன்றுதானே யென்று அவ்வியாத்தி சங்கையுமில்லை.

சங்கை—

சித்தாந்தத்திலே கடாதிக்கு மித்தியாத்துவமாகையினாலே வாதிக்கப்படுகையால் அந்த ஜ்ஞானம் எங்ஙனம் பிரமாணம். * * * *

பிரம சாட்சாத்காரத்துக்குப் பின்பன்றோ கடாதிகட்கு வாதன்; அங்ஙனம் சுருதி சமுசாரதசையிலன்று. அங்ஙனஞ்சுருதி அங்ஙனமாயினும் வாதிக்கப்பட்டதென்னும் மதத்தால் சமுசாரதசையின் வாதிக்கப்படாமை கூறப்பட்டது. ஆதலின் கடாதி பிரமையாலே மவ்வியாத்தியில்லையுங்ஙனங் கூறப்பட்டது.

End:

சீவன்முக்ததசையிலே யான்மாவுக்குக் கரண சம்பந்தமிருக்கையால் அபரோட்சாந்தக்கரணவிருத்திசென்னியானுபவவிஷயத்வங்கூடினாலும், விதேகமுத்தியிலே அந்தக் கரணம் அபாவமாகையால் அபரோட்சாந்தக் கரணவிருத்தி செனனியானுபவ விஷயமான வபரோட்சத்துவ மிகவுஞ் சம்பவியாது. ஆகையால், ஆன்மா ஸ்வப்பிரகாச சைதன்யமாகையால் ஞானாந்தரத்தைத்தான், கரணாந்தரத்தைத்தான் அபேட்சியாமல் தானே ஆன்மாவுக்கு அபரோட்சத்துவம் சம்பவிக்குமாகையால் சீவனுக்குத்தான், சிவானந்தத்துக்குத்தான் ஆன்மாவினுடைய அபரோட்சானுபவ விஷயத்துவஞ் சித்தித்தபடி—சிவானந்தத்துக்கு அபரோட்சானுபவ விஷயத்துவம் எங்கே அனுபவிக்கப்பட்டதென்னில், நித்திரைபண்ணி யெழுந்திருந்தவனுக்குச் சுகமாக நித்திரை பண்ணினேனென்று சுகவிஷய ஸ்மரணமிருக்கையால், அந்த ஸ்மரண விஷயமான சுகம், சிவானந்தமல்லது, ஆன்மானந்தமும் விஷயானந்தமும் அல்ல.

நம்முடைய மதத்தில் ஆன்மாவுக்கு ஆனந்த சொரூபத்துவ மங்கீகரியாதிருக்கையாலும், நித்திரையிலே ஒன்றுமறியேனென்று, ஸகல விஷய(ா)ஜ்ஞானமிருக்கையால் அப்போது சுகவிஷய ஜ்ஞானமபாவமாகையாலும், இது போலவே விதேக முத்தியிலேயும் ஆன்மா சிவானந்தத்தை யனுபவிப்பன். பிரம்மா முதலானவர்களும் சிவானந்தத்திலே சத்தையாசிரயித்து ஆனந்திகளாகவிருக்கிறார்கள் என்று சுருதியிருக்கையாலும்.

Colophon:

ஸ்ரீகுரு சிதம்பர தேவாயநமஃ

இராமநாத பிள்ளையவர்கள் பண்ணின வான்மபிரகாசம் எழுதிநிறைந்தது. முற்றும்.

(கு-பு.)—

இது, வேதாந்த விஷயமானது. வசன நடையில் வினாவிடை ரூபமாகவுள்ளது. இயற்றியவர் இராமநாத பிள்ளை யென்று இறுதி வாக்கியத்தினால் தெரிகின்றது. இதன் முதலேடு இல்லை வாக்கியங்களிற் சிற்சில விடத்துப் பிழையுண்டு.

(b) ஆத்மபரமசிவாத்துவிதப்ரகாசம்.
ĂTMAPARAMAŚIVĂTTUVIDAPRAKĀŚAM.

Foll. 130*a*—131*b*.

A treatise bearing on Śiva Advaita-Vēdānta.

Incomplete.

Beginning :

த[ற்](த்)ப(ே)த நோச்[சி]ய தேலிங்க(ந்) தொம்ப[த]தேந(ா) ங்க[பீ](மீ)ரி [தம்

தயோரைக்கியஸ்யபாவேந சம்பந்தோசிபதே[ம](ந)கி ||

தற்பதமே லிங்கமதாந் தொம்பதமே யங்கமதா
மற்புதமா நல்ல வசிபதமே—பொற்புடைய
சங்கமடா மென்றே புகழ்சுருதி வாக்கியத்திற்
றங்கும் பொருளதனுற் றூள்.

இங்ஙனமீசுரவாக்கியமும் குருவாக்கியமுமிருக்கையால் இம்மகா வாக்கியத்திலுல் இலிங்காங்க சமரசவயிக்கியத்தை யறிகிறதுக்குத் திரியதார்த்தத்வ ஞானம் வந்தாலல்லது அறியப்போகாது.

End:

இங்ஙனமுண்டாக்கப்பட்ட பஞ்சதத்துவத்தினும் எப்படி பிரவேசிப்பரென்னில்; மி[று]ருத்துவினின்றும் கடாதிகள் செனிக்கிறபோது அதிலாகாசம் பிற . . . . .

(கு-பு.)—

இது, சைவாத்வைத வேதாந்தத்தைச் சேர்ந்ததே. இந்தப் பிரதியில் முதலிரண்டேடுகளேயுள்ளன. ஆதலின் இந்நூலாசிரியர் பெயர் முதலிய விவர மொன்றும் புலப்படவில்லை.

R. No. 593.

Palm-leaf. 8¼ × 1¼ inches. Foll. 175. Lines, 11–13 in a page. Tamil. Slightly injured.

Purchased in 1924-25 from M.R.Ry. R. Śrīnivāsa Ayyaṅgār Avargaḷ, Śentamiḻccelvan, Egmore.

(*a*) வாயுசங்கிதை.
VĀYUSAṀHITAI.

Foll. 1*a*—122*a*. Fol. 122*b* is left blank.

A rendering in Tamil of the Sanskrit Vāyusaṁhitā which forms the fifth Saṁhitā of the Śivapurāṇa attributed to Vyāsa.

The work is divided into two Kāṇḍas, viz., the Pūrvakāṇḍa and the Uttarakāṇḍa containing on the whole 1,534 stanzas. It is printed. By Kulaśēkharavaraguṇarāmapāṇḍiyar who was one of the famous Pāṇḍiya kings.

Complete.

Beginning :

சிவமயம். திருச்சிற்றம்பலம்.
வாயுசங்கிதை. கடவுள் வாழ்த்து.

கார்தவழ் கயிலை வலியுடை யரக்கன்
கையிருலைவுற வண்ண
மேர்பெறத் திணிபூண் கட்டிய தேய்ப்ப
விரும் பெரும்பணை நெடுங்காத்தா

லார்வுறத் தழுவி முகிலென முழங்கி
யடியவர்க் காரருள் புரியுந்
தாரணி மவுலியைங்கரக் கடவுடாளிணை
தலையினிற் பணிவாம்.

* * * *

(குருவணக்கம்.)

முன்னைவினை யிருளகல முரிதிரைப் பாற்கடல
கட்டின் முளைத்த திங்க
ணன்னிலவு பரந்தெறிக்கு நலத்தகு வெண்ணீறணி
ந்து நளின வீட்டி
லன்ன முயர்த்தவனறியாவகு செழுத்தின்றன்
மையினை யறியக் கூறித்
தன்னருள் பூத்தாண்டு கொண்ட சுவாமிதேவன்
திருத்தாள் தலைமேற் கொள்வாம். (கூ)

* * * *

திருவளர்கமலத் திறைவனுங்காணுச் செஞ்சடைத்
தனிமுதல் புராண
மருமறைத் தெளிவாம் வாயுசங்கிதையின்
னமுதகு தமிழினுலுரைத்தான்
பருதிவாட்டடக்கைப் பாண்டிய குலசேகரனணி
பனிமலர்ப் பசுந்தார்
வரகுணராமன் புவியெலாதிழற்று மாலை வெண்
கவிகை மீனவனே. (௰௧)

கடவுள் வாழ்த்து முற்றியது.

பூர்வகாண்டம், முதலாமத்தியாம்.

கங்கையங் கடவுணதி திரையெறியுங் கா[ளு](ளி)
ந்தியொடு கலந்தொழுகு
மங்கண்மா ஞாலமேத்திடும் பிரயாகை யதனிடை
யைம்பொறியவித்துப்
பொங்கு மாதவத்தாலுயர்ந்த மாமுனிவர் புரிசடை
யண்ணலைப்போற்றிச்
செங்கையாலழலினவி சொரிந்தழியாத்
தீதறுவேள்வி செய்தனரால். (க)

ஆயகாலையினிற் சூதமாமுனிவனடைதலு
மருந்தவமுனிவர்
வாய்விரிமலர்ப்பூந் தவிசளித்தரிய
மறைதெரிவியாதமாமுனிவ
னேய்வுறவகுத்தபுராணமற்றெவையு
முணர்ந்துளோ யிருங்கதியளிக்கும்
பாய்புனலணிந்தோன் புராணமொன்றெமக்குப்
பகர்ந்திடவேண்டுமென்றுரைத்தார். (உ)

End:

அறுகுலமுனிவர் மலரவனேவ வடைந்தவர்
நின்னுழையென்று
மறுவிலாதுயர்ந்த சனற்குமாரன் றானுரைத்திட
மற்றவர்தம்மை
முறையினோக்கிப் பாசத்தைநீக்கிமொழி
சிவதருமமெய்ஞ்ஞான
முறைதருயோகம் யாவையுமுரைத்து
நந்திபோய்ச் சிவனுழையுற்றான். (உக)
முன்னை நாணந்தியுரைத்திடு ஞானயோகத்தை
முதுசனற்குமாரன்
பன்னினன்வியாதமுனிவனுக் கவன்றான்பாற்பட
வெனக்குரைத்தனனா
லன்னவாறறிய விரித்தியானுமக்கிங்
காசறவுளங்கொளநன்கா
வுன்னருந்தவத்தா லுயர்ந்து மெய்ஞ்ஞான
முணர்ந்துறை முனிவர்காளுரைத்தேன். (உஉ)

* * * *

முனிவர்காளிந்தப் புராணநற்கதையை
முனிவற மொழிந்தனன்யானே
கனியுநல்லன்பாற் கேட்டனிர்நீரே காசறு
நன்மைநாடோறு
மினிவளர்ந்திடுகவென் றிளம்பிறையோடிணர்
மலர்க்கொன்றையந்தொடையல்
புனைசடைமுடியோனடியிணைபோற்றிச்
சூதமாமுனிவரன்போனான். (உரு)
போயபின்வேள்விமுடித்து நம்மிறைவன்
பொருந்திய காசியிவெய்தி
யெய்வுறுபசுபாசத்தினைப் பாசுபதவிரதத்தினா
விரித்துத்
தூயமாஞானமடைந்து நற்சமாதியதனிடைத்
துலங்கிடவுறைத்து
மாய்விலாமுத்திவீட்டின் மாதவத்தோர்
மாசறவைகினர் மாதோ, (உசு)
மறையவர்வாழிகொற்ற மானவேலரசர்வாழி
குறைவறுசைவம்வாழி கோதிலாணினங்கள்வாழி
யிறையவனடியார்வாழி யிசைத்தவிப்புராணந்தன்னை
யறைபவர்கேட்போர்யாரு மனுதினம்வாழிவாழி.

Colophon:

முப்பதாமத்தியாயம் முற்றியது. ஆகச் செய்யுள் எ௱௯௰எ.
உத்தரகாண்டம் முற்றியது.
ஆகக்காண்டம் இரண்டுக்கு அத்தியாயம் அறுபதுக்குச் செய்யுள் கஙஙயச.
திருச்சிற்றம்பலம். அம்பலவாண தேசிகன் திருவடிகடுணை.

(கு-பு.)—

இது, வடமொழியில் வியாஸமுனிவரியற்றியுள்ள சிவமகாபுராணத்தின் ஐந்தாவதாகிய வாயுஸம்ஹிதையின் மொழிபெயர்ப்பு. இந்நூலாசிரியர் பாண்டியவரசரில் பிரஸித்தி பெற்றுள்ள குலசேகரவரகுணராமபாண்டியர். இது பூர்வகாண்டம், உத்தரகாண்டமென இரண்டு பெரும்பிரிவினையுடையதாய் ஆயிரத்துமுந்நூற்று முப்பத்துநான்கு விருத்தப்பாக்களையுடையது. செய்யுள்நடை சிறந்தது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. இஃது அச்சிடப்பட்டுள்ளது.

(b) திருவாளொளிப்புற்றூர்த்தலப்புராணம்.

TIRUVĀḶOḶIPPURṞŪKTTALAPPURĀṆAM.

Foll. 124a—175b.

This work is different from the work described under No. 602 of the D.C.T. MSS., Vol. II. The work is divided into 20 Paṭalas containing on the whole 525 stanzas. The author is the well-known Mīnākṣisundaram Piḷḷai of Trichinopoly who lived nearly 50 years ago.

Complete.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

திருவாளொளிபுற்றூர்(ப்)புராணம்.

கடவுள்வாழ்த்து.

பூமேவுபுழைக்கையகத்தொழுகு மதம்விளர்த்திருக்கும்புதுமைபாதென்
றூமேவுதிலவுலகும்பொலவுலகு மிறும்பூதுற்றையமேவத்
தாமேவுநீராடனையந்தநாட் பாற்கடலுட்டதையவாங்கி
மாமேவுவெளிவிடுத்தசித்திவிநாயகர் மலர்த்தாள்வணக்கஞ்செய்வாம்.

காப்பு.

சீர்பூத்தநறுங்கமலமேலவனு மாலவனுஞ்செம்பொனைய
வூர்பூத்தசுதன்மசபையானு மொளியீனுமுடியும்பாரு
நார்பூத்தபுவியாருங் குவியாரும்வந்திறைஞ்சநாளுநல்கி
யேர்பூத்தவாளொளிபுற்றூ(ர)மர்மாணிக்கலிங்கர்இருதாள் போற்றி. (க)

* * * *

ஈகைமேற்கொண்டநல்லா ரீசனுக்கன்புசான்றோ
ரோகைசால்புகழின்மிக்கா ரொலிகெழுவேளாண்மாந்தர்
பாகைநேர்தமிழாற்பாடித் தருகெனப்பரிந்துகேட்க
வாகையாரணியநாதன்மான் மியம்பாடலுற்றேன். (உக)

வேறு.

பூவுநறும்புழுகுமலிவண்டுவார் குழலியொடு
புராணனூரு
மேவுதிருவாளொளிபுற்றூர்ப்புராணந்தமிழின்
விளங்கச் செய்தான்

றேவுமுனிவரும்பரசு திரிசிராமலைவளர்நூற்
செல்வன்மேன்மேற்
பாவுபுகழ்மீனாட்சிசுந்தரநாவலவனெனும்
பண்பினனே. (உஉ)

பாயிரமுற்றிற்று.

முதலாவது நாட்டுப்படலம்.

பொறைமலிகருணைவண்டார் பூங்குழலுமையாளோடு
மறைமுதற்கலைகள்தேறு மாணிக்கவண்ணர்மேவி
முறைசெய்வாளொளிபுற்றூரேமுதற் பலதலங்கடன்பா
னிறைதரக்கொண்டு நாளுநிகழ்வதுசோழநாடு. (க)

End:

மன்னும்வாளொளி புற்றூர்மகத்துவ
மின்னுங்கூறிற் பலவுள வெம்மனோர்
பன்னுமாறடங்குங் கொள்பள்கறுத்
துன்னுமாதவத் தோங்கியவந்தணீர். (உஉ)

என்றருந்தமுனியை யிறைஞ்சினு
ரொன்றவேயடிப் பூசையுளுற்றினுர்
மன்றவாழ்ந்தனம் வாழ்ந்தனம்யாமெனு
வென்றமாதவர் வீற்றிருந்தாரரோ. (உங)

இப்புராணமெழுதிவைப்போரிதைத்
தப்புறுதுபடிப்பவர் சாற்றுதோ
றெய்ப்புநீத்துறக் கேட்பவர்யாவருஞ்
செப்புவாழ்விற்றிருந்தி யின்பெய்துவார். (உச)

வேறு.

மன்னியவேதாகமங்கள் வாழ்க வாளொளிபுற்றூர்
வாழ்க மேலோர்
பன்னியசீர்வண்டுவார் குழலம்மை பெருங்கருணை
பரந்து வாழ்க
துன்னியமாணிக்கலிங்கப் பெருமானுர்மறை
முழங்கத்துயோர்-வாழ்த்த
வின்னியமார்தருமன்றுண்ட நவிலவெடுத்தபொற்
றாளென்றும் வாழ்க. (உரு)

Colophon:

வண்டுபூசித்த படல முற்றியது.

ஆகப் படலம் இருபதுக்குத் திருவிருத்தம் ருாஉ௰௫.

வாளொளிப்புற்றூர்ப்புராண முற்றுமுடிந்தது.

(கு-பு.)—

இந்நூல் திருவாளொளிப்புற்றூர் என்னும் சிவஸ்தல விஷயமானது. இயற்றியவர் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்பவர். இவர் சீகாழிக்கோவை முதலிய பல நூல்களியற்றியவர். சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்தவர். செய்யுள்நடை நன்றாகவிருக்கிறது. இரு

பது படலங்களையுடையது. செய்யுளின் தொகை 525. டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 602-வது நம்பரில் வந்துள்ளதினும் இது வேறானது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 594.

Palm-leaf. 10¼ × 1¾ inches. Foll. 246. Lines, 11 in a page. Tamil. Injured.

Purchased in 1924–25 from M.R.Ry. Śrīnivāsa Ayyaṅgār Avargal̤, Śentamil̤ccelvan, Egmore.

சிவஞானசித்தியார் சுபட்சம், உரையுடன்.

SIVAÑĀNASIDDHIYĀR SUPATṢAM WITH COMMENTARY.

Same work as that described under No. 1263 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

Fol. 23 is found in duplicate.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 1263-வது நம்பர் பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இவ்வுரை முற்றுமிருக்கிறது. 23 என்னுமெண்ணமைந்த ஏடு இரண்டுள்ளது.

R. No. 595.

Palm-leaf. 17⅞ × 1½ inches. Foll. 105. Lines, 7 in a page. Tamil. Slightly injured.

Purchased in 1924–25 from M.R.Ry. Sāmi Ayyaṅgār Avargal̤, Mannargudi.

இலக்கணவிளக்கம், உரையுடன்.

ILAKKAṆAVIḶAKKAM WITH COMMENTARY.

Same work as that described under No. 36 of the D.C.T. MSS., Vol. I.

Incomplete.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 36-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் சொல்லதிகாரத்து முதல் நான்கு இயல்களே உள்ளன. ஏடுகள் சிறிது சிதைந்துள்ளன.

R. No. 596.

Palm-leaf. 12¾ × 1 inches. Foll. 19. Lines, 6 in a page. Tamil. Fair. Old.

Purchased in 1924–25 from M.R.Ry. Sāmi Ayyaṅgār Avargal̤, Mannargudi.

(*a*) உரோமருஷி சூத்திரம், நூறு.
UROMARṢI SŪTTIRAM, NŪṞU.

Foll. 1*a*—3*b*.

Same work as that described under R. No. 258(*f*) ante.

Contains 1–14 stanzas, the 14th stanza being incomplete.

(கு-பு.)—

இது, மூவருடக் காட்லாக் 258(*f*) நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் 1–13 பாடல்களும், 14-வது பாடலின் மூன்று பாதங்களுமே யுள்ளன.

(*b*) உரோமருஷி சூத்திரம், ஐம்பது.
UROMARṢI SŪTTIRAM, AIMPADU.

Foll. 4*a*—19*b*.

Same work as that described under R. No. 258(*d*) ante.

From the 2nd line of the 5th stanza to the end.

(கு-பு.)—

இது, மூவருடத்துக் காட்லாக் 258 (*d*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் 5-வது பாடல் இரண்டாம் அடி தொடங்கி முற்றுமுள்ளது.

R. No. **597.**

Palm-leaf. 14 × $1\frac{5}{8}$ inches. Foll. 308. Lines, 8 in a page. Tamil. Injured.

Purchased in 1924–25 from M.R.Ry. R. Śrīnivāsa Ayyaṅgār Avargaḻ, Śentamiḻccelvan, Egmore.

சிவஞானசித்தியார் சுபட்சவுரை.
ŚIVAÑĀNASIDDHIYĀR ŚUPAṬṢAVURAI.

Same work as that described under No. 1260 of the D.C T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 1260-வது நம்பர் பிரதிபோன்றது. இதில் இவ்வுரை முற்றுமிருக்கிறது. வடுகள் சிதைந்துள்ளன.

R. No. **598.**

Palm-leaf. $16\frac{1}{2}$ × $1\frac{5}{8}$ inches. Foll. 319. Lines, 7 in a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1924–25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyaṅgār Avargaḻ, Kariccaṅgāl, Maṇimaṅgalam post, Chingleput district.

பாரதவசனம், ஆரண்யபர்வம்.

BHĀRATAVACANAM, ĀRAṆYAPARVAM.

Same work as that described under No. 439 of the D.C.T. MSS., Vol. I.

Contains 1—78 Adhyāyas only.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காடலாக் 439-ஆவது நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் ஆரண்ய பர்வத்தின் - முதலெழுபத்தெட்டு அத்தியாயங்களே உள்ளன. ஏடுகள் சிதைந்துள்ளன.

R. No. 599.

Śrītāla. 20 × 2¼ inches. Foll. 160. Lines, 13 in a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1924–25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyaṅgār Avargaḷ, Kariccaṅgāl, Maṇimaṅgalam post, Chingleput district.

பாரதவசனம், உத்யோகபர்வம்.

BHĀRATAVACANAM, UDYŌGAPARVAM.

Same work as that described under No. 440 of the D.C.T. MSS., Vol. I.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காடலாக் 440-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் உத்யோக பர்வம் ஒன்றே உள்ளது. ஏடுகள் சிதைந்துள்ளன.

R. No. 600.

Śrītāla. 20¼ × 2¼ inches. Foll. 153. Lines, 19 in a page. Tamil and Grantha Slightly injured. Old.

Presented in 1924–25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyaṅgār Avargaḷ, Kariccaṅgāl, Maṇimaṅgalam post, Chingleput district.

பாரதவசனம், சபாபர்வம்.

BHĀRATAVACANAM, SABHĀPARVAM.

Same work as that described under No. 440 of the D.C.T. MSS., Vol. I.

Contains the Sabhāparvam.

(தே-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 440-ஆவது நம்பர் பிரதியைப்போன்றது. இந்தப் பிரதியில் சபாபர்வம் ஒன்றே உள்ளது.

R. No. 601.

Śrītāla. 19¾ × 2 inches. Foll. 95. Lines, 13 in a page. Tamil and Grantha. Slightly injured. Old.

Presented in 1924-25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyaṅgār Avargaḷ, Kariccaṅgāl, Maṇimaṅgalam post, Chingleput district.

பாரதவசனம், விராடபர்வம்.

BHĀRATAVACANAM, VIRĀṬAPARVAM.

Same work as that described under No. 440 of the D. C. T. MSS., Vol. I.

Contains the Virāṭaparvam.

(தே-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 440-ஆவது நம்பர் பிரதியைப்போன்றது. இந்தப் பிரதியில் விராடபர்வம் ஒன்றே உள்ளது.

R. No. 602.

Śrītāla. 19¾ × 2 inches. Foll. 53. Lines, 15 in a page. Tamil and Grantha. Slightly injured.

Presented in 1924-25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyaṅgār Avargaḷ, Kariccaṅgāl, Maṇimaṅgalam post, Chingleput district.

பாரதவசனம், சல்யபர்வம்.

BHĀRATAVACANAM, ŚALYAPARVAM.

Same work as that described under No. 440 of the D.C.T. MSS., Vol. I.

Contains the Śalyaparvam.

(தே-பு.)—

இது டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 440-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் சல்யபர்வம் ஒன்றே உள்ளது.

R. No. 603.

Śrītāla. 20 × 2¼ inches. Foll. 56. Lines, 14 in a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1924–25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyangār Avargal, Kariccangāl, Maṇimangalam post, Chingleput district

பாரதவசனம், ஆரண்யபர்வம்.

BHĀRATAVACANAM, ĀRAṆYAPARVAM.

Same work as that described under No. 439 of the D.C.T. MSS. Vol. I.

Incomplete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 439-ஆவது நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியின் ஏடுகள் ஒன்றோடொன்று பொருந்தாமலும் சிதைந்துமுள்ளன.

R. No. 604.

Śrītāla. 19⅝ × 2 inches. Foll. 53. Lines, 12-13 in a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1924–25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyangār Avargal, Kariccangāl, Maṇimangalam post, Chingleput district.

பாரதவசனம், ஸௌப்திக, ஸ்திரீபர்வம்.

BHĀRATAVACANAM, SAUPTIKA, STRĪPARVAM.

Same work as that described under No. 440 of the D.C.T. MSS., Vol. I.

Contains the Aiṣīkaparvam and Strīparvam.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 440-ஆவது நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில், ஸௌப்திகபர்வத்தின் இறுதிப்பாகமாகிய ஐஷீகபர்வமும், ஸ்திரீபர்வமும் உள்ளன.

R. No. 605.

Śrītāla. 20 × 2⅛ inches. Foll. 156. Lines, 12 in a page. Tamil and Grantha. Slightly injured. Old.

Presented in 1924–25 by M.R.Ry. K. C. Varadarāmānuja Ayyangār Avargal, Kariccangāl, Maṇimangalam post, Chingleput district.

துரோணபர்வதாத்பர்ய சந்திரிகை.

DRŌṆAPARVATĀTPARYA CANDRIKAI.

A Tamil rendering, by Śrīśaila Śrīnivāsatātadēśika, of the Drōṇaparvan, forming part of the Sanskrit Mahābhārata. For similar rendering see 440 of the D.C.T. MSS.

Contains 1 to 102 Adhyāyas.

Beginning:

ஹரி: ஓம். த்ரோணபர்வம். மணிப்ரவாளம்.

ஸ்ரீகாந்தாஶ்ரீபதாரவிந்தம் வந்தேஹம் ஸத்வஸ்ஸ்ய |
ஸ்ரீந்த்ரவிம்ஶதிமம் ஸ்ரீகோபாலநாயகம் ||
வ்யாஸாஸ்யவாஸஜலது வாசீஸஞ்சயாந்தியம் |
நகேஸ்த்ரம்ப்ரதிஷ்ட ஸர்வதா காசாயம்போதிமந்தம் ||
தத்தாபத்ரவாணஸத்யா ததந்தாநதேவிஹோம்யா |
ஸ்ரீத்ரோணபர்வதாத்பர்யம் விஶதீகரவாண்யஹம் ||
நாஹம்வக்தா ந பர்தா கிஞ்சஸர்வஜ்ஞதீர்யம: |
கநபத்ரவிஶ்வகபதே ஜொகாந்தமந்ஹாவிஜயா ||
அஜ்ஞாநதேமண்யஸ்யாப்ரநகாந்ததாநஸாஷிந: |
ஸ்ரீமௌநஸ்ரீஸ்ரீநிவாஸதாஸஸ்யகேஹஸ்ய ||
விஷ்ணுநஸ்யகோராணாம் ஹ்ருதயாஹ்லாதநாயிநீ(ம்) |
ஸ்ரீத்ரோணபர்வதாத்பர்ய அபிகாம்யதபவக்ஷ்யதோ: ||

ஸ்ரிய:பதியாய், நிகிலஜகதேககாரணனாய், நிகிலஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரகாரணனாய், விதிஶிவஸநகாதிகளாலே அறியவொண்ணாத திவ்யாத்புதவைபவத்தையுடையனாய் * * * * * * * * ஏழை பேதைகளுங்கூட இவ்வர்த்தத்தையறிந்து தங்யராகவேணுமென்று திருவுள்ளம்பற்றித் திரும்பவும் * * ஸ்ரீவைஷ்ணவதாஸஹேதனை கரிச்சங்கால் ஸ்ரீநிவாஸனுடைய ஹ்ருதயபத்மஸ்ரீகத்தில் அநுப்ரவேசித்து ஜ்ஞாநஸாமர்த்யத்தையுண்டாக்கி அவனைக்கொண்டு பண்டித ஸர்வஜ்ஞர்களான சில மஹாத்மாக்களுக்குப் போதிப்பித்து * * * * மணிப்ரவாளத்தாலே, ஆதிபர்வம் ஸபாபர்வம் முதலான * * * பர்வங்களின் அர்த்த விசேஷங்களை வெளியிட்டு, இனிமேல் திருமலை லக்ஷ்மீகுமார லக்ஷ்மீந்ருஸிம்மார்ய புத்ர ஸ்ரீநிவாஸதாஸ தாஸனைக்கொண்டு த்ரோணபர்வத்தினுடைய தாத்பர்ய விசேஷத்தை வெளியிடுகிறார்:— * * * * * * * இப்படி பீஷ்மர் மஹா தேஜஸ்ஸான பிறப்பாடு, ஜனமேஜயனை வைசம்பாயனர் பார்த்து * * * * வாரீர் பிராமணோத்தமனே! * * * [த்ரோண](அபிஷேக)பர்வ ஸர்வஹேதுவான துர்யோதன மஹாராஜா * * * * ராஜ்யத்தையநுபவிக்கவேணுமென்று இச்சித்தானே!

End:

தர்மபுத்திரர் ஸாத்யகியினுடைய ரதத்திலே ஏறிக்கொண்டு ரொம்பவும் வேகமாகத்தானே ரதத்தையோட்டிக்கொண்டு, ரணரங்கத்தினின்றும் பிராணனோடே தப்பிப்போனாரென்று ஸஞ்ஜயர் த்ருதராஷ்ட்ரனுக்குச் சொன்னாரென்று ஜனமேஜயனுக்கு வைசம்

பாயனர் உபதேசித்தாரென்று ஸ்ரீமந் மஹாபாரதத்தில் ஸல்யபர்வா ஸாதக ப்ராணவத் ஸாஹஸ்ரிகையில் நூற்றிரண்டாமத்தியாயம்.

